நாடே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. மனசாட்சி உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டுமென்று அனைவரும் காத்திருக்கிறார்கள். எனவே, மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், தக்க தீர்ப்பை வழங்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வன்முறையற்ற, வளமான வாழ்வு தரும் திட்டங்கள் தருவதற்கு தகுதியான தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதல்வராக வரவேண்டும் என்று காத்திருக்கிறார்கள். அந்நாளே உண்மையான சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நல்ல நாள் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-45

8. விதி 110-ன்கீழ் அறிக்கை

தமிழ்ப் புத்தாண்டையொட்டி சர்க்கரைப் பொங்கலுக்கான பொருட்களை நியாய விலைக் கடைகள்மூலம் இலவசமாக வழங்குதல்-மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அவையில் அளிக்கின்றேன்.

தமிழ்ப் புத்தாண்டு தினமான தைத் திங்கள் முதல் நாள், தமிழகத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களும் - சர்க்கரைப் பொங்கலிட்டு, புத்தாண்டுத் திருநாளை மகிழ்வோடு கொண்டாடுவதற்கு ஏதுவாக, கடந்த 2009 ஆம் ஆண்டு - தமிழ்ப் புத்தாண்டு பரிசாக பச்சரிசி அரை கிலோ - வெல்லம் அரை கிலோ - பாசிப் பருப்பு 100 கிராம் - முந்திரிப் பருப்பு 10 கிராம் - உலர்ந்த திராட்சை 5 கிராம் - ஏலக்காய் 5 கிராம் - ஆகிய பொருட்கள் அடங்கிய பை ஒன்று வழங்க ஆணையிடப்பட்டு, ஏறத்தாழ 70 கோடி ரூபாய் செலவில், அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அது இலவசமாக வழங்கப்பட்டது.

2010 நவம்பர் 11] [கலைஞர் மு. கருணாநிதி]

அதேபோல, வரும் 15-1-2011 தைத் திங்கள் முதல் நாள் கொண்டாடப்படவிருக்கும் தமிழ்ப் புத்தாண்டு திருநாளை - தமிழகத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களும் மிகுந்த மகிழ்ச்சியோடு கொண்டாட அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் நியாய விலைக் கடைகள்மூலமாக 1-1-2011 முதல் தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாக சர்க்கரைப் பொங்கலுக்கான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என்ற அறிவிப்பினை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010—2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் துணை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த அய்யா பெரியாரின் கோட்பாடுகளையும், பேரறிஞர் அண்ணாவின் செயல் திட்டங்களையும் ஒருங்கே பெற்று வாழும் வரலாற்று தலைவர் நமது முதல்வர் அய்யாவை வணங்குகிறேன்.

பொதுவாழ்வில் உள்ளோர்களுக்கும் இம்மாமன்றத்தில் உள்ளோர்களுக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கற்றுத் தரும் இனமானப் பேராசிரியரை வணங்குகிறேன்.

இளைஞர்களுக்கும் எதிர்காலத் தலைமுறைக்கும் சமூகப் பணியிலும், உழைப்பிலும் முன்மாதிரியாய்த் திகழ்ந்து தமிழ்நாட்டில் மகளிர் சுய மரியாதையை பேணிப் பாதுகாத்திட சுழல்நிதி வழங்கிடும், ஓய்வறியாமல் உழைத்திடும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதியாரை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியத்தில் சுமார் 4 இலட்சத்து 79 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளதின் வாயிலாக சுமார் ஒரு குழுவுக்கு குறைந்தபட்சம் 10 பேர் என்றாலும், சுமார் 40 இலட்சம் மகளிர் பயன் பெற்றுள்ளார்கள்.